# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1916/36 - 2015 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2015.05.29

*1916/36 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுச் சட்டம்**

*39 (1) ஆம் பிரிவின் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளைத் தொடரின் 54 (3) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் எரன்ஜன் திசாநாயக்க ஆகிய நான் , 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் கீழ், 2015.03.25 ஆந் திகதிய 1907/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்கமைய சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களிற்கும் உரிய வேட்பு மனுக்களைக் கோரி 2015 மே மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். எனவே ஏற்கனவே உரிய கால எல்லைக்குள் வாக்கெடுப்பை நடாத்தத் தவறியுள்ள மற்றும் சட்ட ரீதியாக வாக்கெடுப்பு நடாத்தப்படாத சகல விளையாட்டுச் சங்கங்களின் வாக்கெடுப்பு நடாத்தப்படும் வரை அச்சங்கங்களின் செயற்பாடுகளை முறையாக பேணுவதற்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தராக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கே. டீ. எஸ். ருவன்சந்திர அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 39 (1) ஆம் வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகல விளையாட்டுச் சங்கங்களுக்கும் அறிவிக்கின்றேன்.*

*இதற்கமைய 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் 2013, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1825/38 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் 54 (3) ஆம் வாசகத்திற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தெடர்பான கோவைகளுக்கிணங்க எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. கே. டீ. எஸ். ருவன் சந்திர அவர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கங்களில் புதிய உத்தியோகத்தர் சபையை தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பிற்கு அழைத்தல் மற்றும் நடாத்துவதற்கு இத்தால் உத்தரவிடுகிறேன்.*

1. பூப்பந்து
2. ஹொக்கி
3. றக்பி காற்பந்து
4. கொல்ப்
5. டெனிஸ்
6. பிரிஜ்
7. குத்துச் சண்டை
8. கரப்பந்து
9. கைப்பந்து
10. படகு ஓட்டம்
11. மென்பந்து கிரிக்கட் போட்டி
12. மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டு
13. மோட்டார் சைக்கிள் விளையாட்டு
14. துரோபோல்
15. சம்பிரதாய கராத்தே
16. ரைபல்
17. கரம்

நவீன் எரன்ஜன் திசாநாயக்க,
சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2015, மே 16.

6 - 423


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.





இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.